1990 மே 5]

சாலை, கப்பி சாலை என்று கிடையாது. தமிழ்நாட்டில் எல்லா சாலைகளும் மண் சாலைகளாகத் தான் இருக்கின்றன. பெயருக்கு வேண்டுமானால் தார்ச்சாலை என்று இருக்கலாம். இந்த அரசு படிப்படியாக அவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. முதலில் பஸ் சாலைகளுக்கு, அவைகளைப் பராமரிக்கின்ற வேலை, அதனூடே மற்ற பணிகள். அன்றைக்கே இவைகளைப் பற்றி எல்லாம் நான் படித்தேன். ஆர். ஆர். திட்டத்தின்கீழ் இவைகளை எல்லாம் செய்து கொண்டிருக்கிறோம். எங்கேயாவது கொஞ்சம் கிழிசல் என்றால் ஒரு துணியைத் தைக்கலாம். வேட்டி முழுவதுமே கிழிந்து போனால் என்ன செய்வது ? புது வேட்டி எடுக்கும் நிலைமைதான் ஏற்படும். அதுபோல தான் இதிலும் இந்த அரசுக்கு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, தமிழ்நாட்டிலே இருக்கிற எல்லா சாலைகளையும் புதுப்பிக்கிற, சீர்படுத்துகிற நிலைமையை இந்த அரசு செய்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இருவழி மார்க்கம்.

*4362 திரு. வி. தம்புசாமி :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவாரூர் பேருந்து நிலையத்தில் இருந்து மயிலாடுதுறை, கும்பகோணம் செல்லும் பேருந்துகளும் இதர வாகனங்களும் குறுகலான ஒருவழி மார்க்கத்தில் செல்ல வேண்டியிருப்பதால் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்க இருவழி மார்க்கம் ஏற்படுத்த அரசுக்குக் கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது இருவழி பாதை ஏற்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) 1. திருவாரூர் பேருந்து நிலையத்திலிருந்து மயிலாடுதுறை செல்லும் ஒரு வழி மார்க்கத்தை இருவழியாக மாற்றும் செயற்குறிப்பு மத்திய சாலை நிதித் திட்டத்தில் சேர்ப்பதற்கு அரசின் பரிசீலனையில் உள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2. திருவாரூர்-கும்பகோணம் சாலையை இருவழித்தட மாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

(ஆ) மத்திய அரசின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றபின் இப்பணி செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப் படும்.

திரு. வி. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் பேருந்து நிலையத்திலிருந்து இரு வழி சாலை மார்க்கங்கள் இல்லாத காரணத்தினால் மருத்துவ மனைகளுக்கு அவசரமான கேஸ்களைக் கொண்டு செல் வதில் சிரமமாக இருக்கிறது. சாலைகள் மிகவும் குறுகலாக இருக்கின்றன. எனவே, இந்தத் திட்டத்தை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்ததைப் போல எவ்வளவு வேக மாக நிறைவேற்ற இருக்கிறார்கள் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு கேள்விகளை உள்ளடக்கி ஒரே கேள்வியாக இங்கே மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருக் கிறார். திருவாரூரில் இருந்து மயிலாடுதுறை செல்கிற அந்தச் சாலையை, அந்த வழித்தடத்தை இருவழி சாலை களாக மாற்றுவீர்களா என்றும் கேட்டிருக்கிறார்கள். திருவாரூர்-மயிலாடுதுறையில், வழியில் பனங்கல் சாலை, இரண்டு தெற்கு வீதி சாலை, மூன்று, கமலாலயம் கீழ்கரை சாலை, நான்கு, மயிலாடுதுறை — முத்துப்பேட்டை சாலை யையும், திருவாரூர் — குடவாசல் — வலங்கைமான் சாலையையும் இணைக்கின்ற சாலை, ஐந்து, மயிலாடுதுறை — முத்துப் பேட்டை சாலை, ஆகிய ஐந்து சாலைகள் அந்த வழித் தடத்திலே அமைந்திருக்கின்றன. இதிலே பனங்கல் சாலை, தெற்கு வீதி, கமலாலயம் கீழ்கரை சாலை ஆகிய சாலைகள் ஏற்கெனவே முனிசிப்பாலிட்டியினுடைய சாலைகள். அவை ஏற்கெனவே இருவழி சாலைகள் ஆக இருக்கின்றன. மீதி யிருக்கின்ற மயிலாடுதுறை — முத்துப்பேட்டை சாலை, திருவாரூர் — குடவாசல் — வலங்கைமான் சாலையை இணைக் கின்ற அந்தச் சாலையும், ஜாயிண்ட் சாலை, அதன் ஒரு பகுதி இரு வழி பாதையாகவும் ஒரு பகுதி ஒரு வழி சாலை யாகவும் இருக்கிறது. அதிலே பெரும் பகுதி நகரத்திற்கு உட்பட்ட பகுதியில் பெரிய பெரிய கட்டிடங்கள் அமைந்து விட்டு இருக்கின்ற காரணத்தினாலே அவைகளை இப்போது இடிப்பதற்குத் தோதுபட்டு வராது. எனவே, அந்த இடத்தில் இரு வழி சாலை அமைக்க முடியாது. அதுபோல மயிலாடு துறை, முத்துப்பேட்டை சாலையிலும் ஒரு பகுதி இருவழி

1990 மே 5]

பாதையாகவும், ஒரு பகுதி ஒருவழி பாதையாகவும் இருக்கிறது. மற்ற பகுதிகளையும் இரு வழி சாலைகளாக மாற்றுவதற்குத்தான் மத்திய அரசினுடைய, சி. ஆர். பி. யினுடைய, அந்த ஃபண்டினுடைய ஹெல்ப்பைக் கேட்டிருக்கிறோம். அதுபோல திருவாரூர் — கும்பகோணத்திலும், பனங்கல் சாலை, தெற்கு வீதி இவை இரண்டும் ஏற்கெனவே முனிசிப்பல் ரோடுகள். திருவாரூர்— குடவாசல்— வலங்கைமான் பகுதியில் 19.60 கிலோ மீட்டர்தான் ஒரு வழி சாலையாக இருக்கிறது. கும்பகோணம் — கொறடாச்சேரி— இலக்குமன் குடி ஆகிய ஊர்களுக்குப் போகிற வழியில் 16 கிலோ மீட்டர் தூரம் ஒரு வழி சாலையாக இருக்கிறது. இவைகளையும் இருவழி சாலையாக மாற்றுவதற்குத்தான் மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. அது விரைவில் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதாவது அமைச்சர் அவர்கள் கூறியதுபோல அந்தக் கோவிலுனுடைய தேருக்குப் பின்புறம் இருக்கின்ற ஒரு குறிப்பிட்ட எல்லைப் பகுதியை விரைவில் அகலப் படுத்துவதன் மூலம் இந்த இரண்டு மார்க்கங்களையும் நாம் எடுப்பதற்கு வாய்ப்பு உள்ளது. எனவே, இந்தக் குறுகிய தெருவிலே உள்ள அந்தச் சாலையை அகலப்படுத்த விரைவாக நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னை விட திருவாரூரைப் பற்றி மாண்புமிகு உறுப்பினருக்கு அதிகமாகத் தெரியும். அங்கே தான் மிகப் பெரிய கட்டிடங்கள் இருப்பதாக எனக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. கட்டிடங்களை இடிக்கிற நிலைமை அங்கே இல்லாவிட்டால் அவற்றை மாற்றியமைக்கும் முயற்சி களை இந்த அரசு எடுத்துக் கொள்ளும் என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூரில் மேம்பாலம் தொடர்பாக ஒரு சுற்றுச் சாலை பின்புறத்தில் உருவாக வாய்ப்பு இருக்கிறது. அதுபோல வட புறத்திலே ஒரு சுற்றுச் சாலை உருவாகி விடும் என்பதால் அங்கே பாலம் இல்லாமல் சாலை மட்டும் போட வேண்டும். அப்படி விஸ்தரித்தால், நகரில் இருக்கின்ற சாலைகள் எல்லாம் குறுகிய சாலைகளாக இன்றைக்கு இருக்கின்ற காரணத்தினால் போக்குவரத்திற்கு நல்லபடியாக நிலைமை ஏற்படும் என்பதை உணர்ந்து அரசு அதைச்

9-40 மணி.

செய்யுமா என்று அறிவதோடு இந்தச் சாலைகளை மேம்படுத்துவதற்கு எண்ணெய்—எரிவாயு நிறுவனத்திடமிருந்து கேட்கப்பட்ட பணம் அரசுக்குக் கிடைத்திருக்கிறதா? அப்படி இல்லை என்றால் மத்திய சாலை நிதியிலிருந்துதான் அதைச் செய்ய வேண்டுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியிருக்கிறோம். விரைவில் அதற்கான பதில் வருமென்று எதிர்பார்க்கிறோம். அது குறித்து அரசாங்கம் தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திருவாரூர்-கும்பகோணம் நெடுஞ்சாலையில் ஏராளமான வளைவுகள் இருப்பதால், எதிர்ப்புறத்தில் வரும் வாகனங்கள் தெரியாமல் விபத்துக்கள் நடைபெறுகின்றன. எனவே அந்த வளைவுகளை நிமிர்த்த உடனடியாக ஒரு திட்டத்தை அரசு செயற்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்து நியாயமானதுகூட. பொதுவாக தஞ்சை மாவட்டத்தில் சாலைகள் வளைந்து வளைந்துதான் போகின்றன. ஆகையால் இவைகளை எல்லாம் ஒரே சீராக, நேர்க் கோட்டுக்குக் கொண்டு வர முடியுமா, எந்தெந்த சாலைகளுக்கு முதலிடம் கொடுத்துச் செய்யலாம் என்று அறிக்கை கேட்டிருக்கிறேன். அது வந்த பிறகு நிதி நிலைமைக்கு ஏற்ப சாலைகளை நிமிர்த்தும் பணி மேற்கொள்ளப்படும்.

உடப்பை திட்டுப் பள்ளம் நீர்த்தேக்கத் திட்டம்.

* 4454. திரு. எம். சீரங்கன்:

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், கொளத்தூர் ஒன்றியம், லக்கம்பட்டி பஞ்சாயத்தில் மாண்டியூர்காடு பகுதியில் உடப்பை திட்டுப்